**தலைப்பு – 213 கல்வி வெளியீட்டுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுல்ப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 153.21 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 105.20 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, திணைக்களத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 48.01 மில்லியன் அதாவது 31.34 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 58.88 | 56.87 | 2.01 | 3.41 |
| மூலதனம் | 94.33 | 48.33 | 46.00 | 48.76 |
| **மொத்தம்** | **153.21** | **105.20** | **48.01** | **31.34** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 10.00 | 9.04 | 5.00 | 6.19 | 35.00 | 21.99 |

### 2.2.2 வணிக முற்பணக் கணக்கு

**(அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்தினால் பேணப்பட்ட வணிக முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 5,615.00 | 2,188.87 | 4,000.00 | 5,580.99 | 4,000.00 | 679.26 | 1,900.0 | 1,534.3 |

**(ஆ) நிதி விளைவுகள்**

வணிக முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறு காணப்பட்டன.

| முற்பணக் கணக்கு நடவடிக்கை | நிதி விளைவுகள் 2016 | | 2015 | |
|---|---|---|---|---|
| | இலாபம் கருதுகோள் கட்டணம் தவிர்ந்த | இலாபம் கருதுகோள் கட்டணத்துடன் | இலாபம் கருதுகோள் கட்டணம் தவிர்ந்த | இலாபம் கருதுகோள் கட்டணத்துடன் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| புத்தகங்கள் அச்சிடுதல், வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல் | 1,095.38 | 343.53 | 2,034.2 | 1,171.4 |

### 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0172/0016/000 ஆம் இலக்கக் கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 24.02 மில்லியனாகும்.

### 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 3 பொது வைப்புக் கணக்குகளுக்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3.87 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இல. | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/000/0001/0088/000 | 3.10 |
| 6000/0000/000/0013/0078/000 | 0.40 |
| 6000/0000/000/0016/0066/000 | 0.37 |
| **மொத்தம்** | **3.87** |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

21301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 201,832 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 05 வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு தவறியிருந்தன.

**3.2 வணிக முற்பணக் கணக்கு**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 21302 ஆம் விடய இலக்க புத்தகங்கள் அச்சிடுதல், வெளியிடுதல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பாக வணிக முற்பணக் கணக்கு செயற்பாடொன்று நிறைவேற்றப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அக்கணக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்கான முற்பணக் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்படமுடியாதிருந்ததுடன், முன்னைய ஆண்டுகளது கணக்குகள் தொடர்பாகவும் கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட முடியாதுள்ளது.

(ஆ) முற்பணக் கணக்கில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 603,560 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டின் போது அச்சிடுபவர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 668.87 மில்லியன் மொத்த அச்சிடல் முற்பணத் தொகை உற்பத்திக் கணக்கில் அச்சிடல் பணமாக காட்டப்பட்டிருந்தது. ஆகையால் முற்பணம் முழுமையாக செலவிடப்பட்டிருந்ததா எனவும் தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணத் தொகை எவ்வளவு என்பதையும் தீர்மானிக்க முடியாதிருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டின் போது 102 மெதுவாக விற்பனை செய்யப்படும் புத்தகங்களின் பட்டியலொன்று பெறுமதி குறிப்பிடப்படாது கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் எந்தவொரு அடிப்படையுமின்றி திணைக்களத்தால் வருடாந்தம் மெதுவாக விற்பனை செய்யப்படும் புத்தகங்களிற்கு ரூபா 3,000,000 நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரை அக் கணக்குகளில் ரூபா 42,046,773 மீதியொன்று காணப்பட்டது.

(உ) கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 364,466,325 மீதியொன்று அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அம்மீதி இலாபநட்ட ஒதுக்கீட்டுக் கணக்கில் கடன்கொடுத்தோர் சீராக்கமாக பதிவு செய்யப்பட்டு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2016 சனவரி 01 இல் உள்ளவாறு பாவனைக்குட்படுத்த முடியாதிருந்த ரூபா 114,448,637 பெறுமதியான புத்தகங்களின் இருப்பு மீதி காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில் ரூபா 87,667,015 பெறுமதியான புத்தக இருப்பொன்று தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 6,738,174 தொகைக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதனால் ஏற்பட்ட ரூபா 63,808,154 தொகையான தேறிய நட்டம் ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருக்காததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாவனைக்குட்படுத்த முடியாதிருந்த புத்தகங்களின் இருப்பு ரூபா 43,902,309 தொகையாகும்.

(எ) திணைக்களத்தினால் அச்சிடுவதற்காக வழங்கப்படும் புத்தகங்களிற்காக குறிப்புரைகளில் சுட்டிக்காட்டப்பட்ட தாள்களின் எண்ணிக்கையை விட கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ காணப்படும் போது அச்சிடுபவரிடமிருந்து அறவீடொன்றோ அல்லது அச்சிடுபவரிற்கு கொடுப்பனவொன்றோ மேற்கொள்ளப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டின் போது அவ்வாறு தாள்களின் எண்ணிக்கையைவிடக் கூடுதலாக அல்லது குறைவாக பதிவு செய்யப்பட்டதால் ரூபா 19,206,008 தேறிய வேறுபாட்டு மீதி இலாபநட்டக் கணக்கில் புறம்பான விடயமொன்றாக காட்டப்பட்டிருக்காததுடன் அச்சிடல் கட்டண செலவினங்களிற்குள் இது உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஏ) பாவனைக்குட்படுத்த முடியாத ரூபா 303,469,564 புத்தக இருப்பு, பாவனையிலிருந்து அகற்றப்பட்ட புத்தக இருப்பாக ஐந்தொகையில் 08 ஆண்டு காலத்திற்கு மேலாக தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அவ்வாறு பாவனைக்குட்படுத்த முடியாத புத்தக இருப்பு பௌதீக ரீதியாக காணப்படுகின்றமை தொடர்பான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) வருடாந்தம் பாவனையிலிருந்து அகற்றப்படுகின்ற புத்தகங்களிற்காக ரூபா 43,902,309 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 838,081,734 கூட்டுமொத்தமான மீதியொன்று காணப்பட்ட போதிலும் அத் தொகைக்குரிய பாவனைக்குட்படுத்த முடியாத புத்தக இருப்பு மீதியொன்று கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 2010 திசெம்பர் 31 தொடக்கம் 06 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக கைதவிர்ப்பதற்காக பட்டியலிடப்பட்ட கிரயமாக ரூபா 312,831,071 மீதியொன்று ஐந்தொகையில் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததுடன் கைதவிர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததா அல்லது அக் கிரயம் நீக்கப்பட்டிருந்ததா என்பதற்கான சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) இலாபநட்ட ஒதுக்கீட்டுக் கணக்கில் ஆண்டின் தேறியலாபம் மாத்திரம் பகிர்ந்தளிப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் ஆண்டின் தேறியலாபத்திற்கு மேலதிகமாக முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 7,161,239,761 மீதியொன்றும் ஆண்டினுள் பகிர்ந்தளிப்பிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஔ) 2015 ஆம் ஆண்டில் ஒருகொடவத்த களஞ்சியசாலைக்காக செலுத்தப்பட்ட ரூபா 4,464,177 கட்டிட வாடகை 2016 ஆம் ஆண்டின் வாடகையாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(க) 2016 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 1,401,355,548 இருப்பு மீதி காணப்பட்ட போதிலும் வியாபாரக் கணக்கில் ரூபா 1,399,965,822 ஆக குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 1,389,725 ஆல் மொத்தலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**3.3 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

நிதிப்பிரமாணம் 510 (2) (ஆ) இலுள்ள ஏற்பாட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட முற்பணக் கணக்கில் ரூபா 1,596.92 மில்லியன் இலாபத்தை அரசாங்க வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 29 ஆம் திகதி பாடப்புத்தகங்கள் ஏற்றப்பட்ட லொறி குருணாகல் கோட்டக் கல்வி அலுவலகத்தின் பாடப்புத்தக களஞ்சியத்துடன் மோதி சேதத்திற்குள்ளாகியிருந்ததுடன் வடமேல் பொறியியலாளர் திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் திருத்தச் செலவினம் ரூபா 229,000 ஆக இருந்தது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரையில் விபத்து தொடர்பான குற்றவாளி நிரூபிக்கப்பட்டிருக்காததுடன் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாடசாலைப் பாடப்புத்தகங்களை பகிர்ந்தளித்தல்

பாடசாலைப் பாடப்புத்தகங்களை பகிர்ந்தளித்தல் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 ஆம் ஆண்டிற்கான பாடப்புத்தகங்கள் 2016 ஒக்தோபர் வரையிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பாடப்புத்தகங்கள் கட்டளையிடப்பட்ட எண்ணிக்கையை விட மிகையாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(iii) பாடப்புத்தகங்களை விநியோகிக்கும் நிலையங்களில் குறைபாடுகள் காணப்பட்டன.

(இ) பாடப்புத்தகங்களை அச்சிடும் போது அச்சிடல் கட்டளையில் குறிப்பிடப்பட்ட குறிப்புரைகளைவிட அச்சிடப்பட்ட புத்தகங்களின் தாள்கள் அதிகரித்தமைக்காக ரூபா 66,613,601 செலுத்தப்பட்டிருந்ததுடன் தாள்கள் குறைந்தமைக்காக ரூபா 57,359,362 குறைவாக செலுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் அச்சிடும் போது தாள்கள் அதிகரித்தமைக்காக ரூபா 3,176,989 மேலதிகக் கொடுப்பனவொன்றும் தாள்கள் குறைந்தமைக்காக ரூபா 2,166,555 குறைவாகவும் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு தாள்கள் குறைந்து கூடுவதற்கு பங்களித்த காரணங்கள் மற்றும் பாடப்புத்தகங்களில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ஆம் ஆண்டிற்கான 44,073,100 பாடப்புத்தக தாள்களை அச்சிடுவதற்காக ரூபா 3,651,746,650 பெறுமதிக்கான கட்டளை அரசாங்க மற்றும் தனியார் அச்சகங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் தண்டப்பணம் அறவிடுதல் மற்றும் விலக்களித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தண்டப்பணத்தை அறவிடுதல் தொடர்பில் திணைக்களச் சுற்றறிக்கையோ அல்லது ஏனைய ஏற்பாடுகளோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) குறிப்புரைகளிலிருந்து விலகி அச்சிடப்பட்ட புத்தகங்களை நிராகரிப்பதற்குப் பதிலாக அவை கையேற்கப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்டிருந்ததுடன் தரத்தில் குறைந்த பாடப்புத்தகங்கள் கையேற்கப்பட்டிருந்தன.

(iii) புத்தகங்களை அச்சிடுவதற்குரிய மென் பிரதிகள் உரிய கட்டளைகளை முன்வைக்கும் நேரத்தில் வழங்கப்பட வேண்டிய போதிலும் உடன்படிக்கைகளின் பிரகாரம் அச்சிடுதல் பூர்த்தி செய்தல் தொடர்பாக பாடப்புத்தகங்களை அச்சிட்டு கையளிக்க வேண்டிய திகதி வரையிலும் அச்சீட்டாளர்களிற்கு உரிய மென் பிரதிகள் வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iv) பாடப்புத்தகங்களை அச்சிடும் போது ஏற்பட்ட தாமதங்கள் அச்சீட்டாளர்களின் தாமதம் மற்றும் திணைக்களத்தின் தாமதமாக தண்டப்பணம் கணிப்பிடப்பட்டதுடன் தாமதமான நாட்களின் கணிப்பீட்டை உறுதிப்படுத்துவதற்கு முறையான நடைமுறையொன்று காணப்படவில்லை.

(உ) பாடசாலை பாடப்புத்தகங்கள் கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளிலுள்ள விநியோக நிலையங்கள் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் கடுவல கோட்டக் கல்வி அலுவலகத்தின் விநியோக நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கட்டளைப் பதிவேடுகளின் பிரகாரம் கோரப்பட்ட பாடப்புத்தகங்களின் எண்ணிக்கையை விட மேலதிகமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ii) 2017 முதலாவது பாடசாலைத் தவணை இறுதி வரை பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 45 | 39 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 120 | 83 | 37 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 73 | 63 | 10 | - |
| (v) | ஏனையவை | - | 102 | - | 102 |
| | **மொத்தம்** | **242** | **290** | **54** | **102** |